

# முல்லைபெரியாறு விவகாரம்... வேகம் கூடாது... விவேகம் வேண்டும்!

கூடங்குளம் பிரச்சனை, முல்லைப்பெரியாறு, தமிழக மீனவர்கள் விவகாரம் என தினமும் செய்திகளுக்குப் பஞ்சமில்லை. இதனால் அரசியல் கட்சிகள் அனைத்துமே ரொம்பவும் பரபரப்பாகி விட்டன. இதில் யாருக்கு நன்மை கிட்டுகிறதோ இல்லையோ.... நிச்சயமாக தலைவர்களுக்கும், கட்சிகளுக்கும் இலவச விளம்பரம் கிடைக்கிறது.

இந்நிலையில் அரசின் திட்டங்கள், விலை உயர்வு போன்ற விவகாரங்கள் அப்படியே திசைமாறி விட்டன. பால் விலை, பஸ் கட்டண உயர்வு பற்றி பேசியவர்களின் வாய்க்கு பூட்டு போடும் வகையில் அமைந்துவிட்டன.

இது ஒருவகையில் ஆளுங்கட்சிகளுக்கு தாற்காலிக நிவாரணம் என்று கருதினாலும், தலைவலிபோய் திருகுவலி வந்த கதையாகிவிட்டது. காரணம் முல்லைப்பெரியாறு விவகாரம். இலங்கைத் தமிழர் பிரச்சனைகளோடு இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமோ என்ற மனப்போக்கு காணப்படுகிறது.

மொத்தத்தில் மத்திய, மாநில அரசுகள் பாடுதிண்டாட்டம்தான். அதேவேளையில் ஊமை கனவு கண்டதைப் போல இருக்கிறது வாக்காளர்கள் நிலை. உதாரணமாக விவசாயத்துக்கு அரசு அளிக்கும் பல்வேறு சலுகைகள், அறிவிப்புகள் நடைமுறைப்படுத்தாமல் தாமதமாகியுள்ளன. தமிழக விவசாயிகளின் நிலை சொல்லமுடியாத துயரத்தில் உள்ளது. யூரியா தட்டுப்பாடு காரணமாக நித்தமும் பாதிக்கப்படும் விவசாயிகளின் கவலையை யார் துடைக்கப்போகிறார்கள் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

உரம் கிடைக்காமல் அரசு உரக்கிடங்கில் தவம் இருக்கும் விவசாயிகளின் எண்ணிக்கை